**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>**

2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 8 ஆம் நாள் புதன்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. சே.சங்கீதா, உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 468/2018** வா.சா. 2 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | லட்சுமணன் | **வயது** | : | 61 |
| **த.பெ** | : | ரங்கசாமி கவுண்டர் | **தாலுக்கா** | : | சேத்பட் |
| **கிராமம்** | : | சேத்பட் | **தொழில்** | : | விவசாயம் |

**<u>08.10.2025 – வா.சா. 2 குறுக்கு விசாரணை</u>**

1) என் தந்தை 10.10.2001 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் தகப்பனார் இறக்கும்போது எத்தனை நாட்கள் படுத்த படுக்கையாக இருந்தார்கள் என்றால் ஒரு நாள் உடல் சரியில்லாமல் படுத்த படுக்கையாக இருந்தது கிடையாது. என் தந்தைக்கு 5 மகன்கள், மற்றும் 2 மகள்கள் ஆவார். அவர்கள் சுப்பிரமணி, பழனி, சண்முகம், கோதண்டராமன், லட்சுமணன், ஆதிலட்சுமி, சரஸ்வதி ஆகியோர் ஆவர். பிரதிவாதிகள் என்னுடைய சகோதர் பழனி அவரின் மகள்கள் ஆவார். ஒ.எஸ் 287/2008 இந்ந நீதிமன்றத்தில் தாக்கல் செய்த சமயத்தில் என்தந்தை உயிருடன் இருந்தாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை.

2) மேற்படி ஒ,எஸ் 287/2008 வழக்கில் நானும், வழக்கின் 2 வாதிகள், ஆதிலட்சுமி மற்றும் சரசு ஆகியோர் 08.09.2008 ல் வழக்கறிஞர் வைத்து நீதிமன்றத்தில் ஆஜராகினோம் என்றால் சரிதான். மேலும் 13.10.2008 ல் பதிலுரை தாக்கல் செய்யாமல் மேற்படி அனைவரும் ஒருதலைபட்சம் ஆக்கப்பட்டோம் என்றால் சரியல்ல. நான் கூறுவது தவறு, மேலும் மேற்படி ஒ.எஸ் 287/2008 வழக்கில் 4,5,6 பிரதிவாதிகள் வழக்கை நடத்தில் மேற்படி வழக்கில் கேட்கப்பட்டு தீர்ப்பு 24.07.2009 ல் முதல்நிலை தீர்ப்பானை பிறப்பிக்கப்பட்டது என்றால் மேற்படி தீர்ப்பான விவரம் எனக்கு தெரியாது. மேற்படி தீர்ப்பாணை விவரம் எனக்கு 2 வருடங்கள் கழித்துதான் தெரியவந்தது.

3) மேற்படி தீர்ப்பானைக்கு நான் மேல்முறையீடு செய்தேனா என்றால் செய்தேன், போளூர் நீதிமன்றத்தில் தான் செய்தேன். சார்பு நீதிமன்றமா அல்லது மாவட்ட உரிமையியல் நீதிமன்றமா என்றால் ஞாபகமில்லை. நான் மேற்படி முதல்நிலை தீர்பபாணையை எதிர்த்து மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை, நான் பொய் கூறுகிறேன் என்றால் சரியல்ல. மேலும், முதன்மை விசாரணையில் ஒ.எஸ் 287/2008 வழக்கில் தீர்ப்பு போர்ஜரி என்று கூறுகிறேன் எதன் அடிப்படையில் போர்ஜரி என்று நான் கூறுகிறேன் என்றால் எனக்கு தானசெட்டில்மெண்ட் கொடுக்கப்பட்ட சொத்து குறித்து தீர்ப்பு வந்ததால் போர்ஜரி என்று கூறுகிறேன்.

4) மேற்படி ஒ.எஸ் 287/2008 வழக்கில் இறுதிநிலை தீர்ப்பாணை 04.12.2009 க்கு முன்பாகவே எனக்கு இறுதிநிலை தீர்ப்பாணை நோட்டீஸ் எனக்கு வந்துவிட்டது என்றால் சரிதான். மேற்படி

நோட்டிஸ் பெற்று 2 மாதங்கள் கழித்து தான் தற்போதைய வழக்கை நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். முதல்நிலை தீர்ப்பாணையை எதிர்த்து நான் மேல்முறையீடு செய்யாததால் அதை ஏற்றுக்கொள்வது தான் அர்த்தம் என்றால் சரியல்ல. மேலும் முதல்நிலை தீர்ப்பாணையை ரத்துசெய்யகோரி நான் மனு எதாவது தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. என் தந்தை **வா.சா.ஆ-2** தானசெட்டில்மெண்ட் எனக்கு எப்போது எழுதிகொடுத்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை.

5) என் தந்தை 09.10.2001ல் **வா.சா.ஆ-2** எழுதப்பட்டு அடுத்தநாள் 10.10.2001ல் காலமாகிவிட்டார் என்றால் எனக்கு **வா.சா-ஆ-2** எந்த தேதியில் எழுதப்பட்டது என்று ஞாபகமில்லை. வா.சா.ஆ-2 பத்திரம் எழுதுவதற்காக சேத்பட் ரிஜிஸ்டர் ஆபிசிற்கு நான் என் தந்தையை வண்டியில் அழைத்துகொண்டு சென்றேன். **வா.சா.ஆ-2** ஆவணத்தில் சொத்தை விற்பவர் இடத்தில் என் தந்தை கையெழுத்து போட்டார் வாங்குபவர் இடத்தில் வாதிகள் கையெழுத்து போட்டோம் என்றால் சரிதான். **வா.சா.ஆ-2** ஆவணத்தில் என் தந்தை தமிழில் கையொப்பம் போட்டாரா, ஆங்கிலத்தில் கையொப்பம் போட்டாரா என்றால் தமிழில் கையொப்பம் போட்டார். வாதிகளுக்கு மட்டும் ஏன் என் தந்தை தானசெட்டில்மெண்ட் **வா.சா.ஆ-2** எழுதிவைத்தார் என்றால் எங்கள் மீது இருக்கும் பிரியத்தால் எழுதிவைத்தார்.

6) **வா.சா.ஆ-2** ல் சாட்சிகள் யார் என்றால் ஒரு நபர் உறவினர், மீதம் 2 பேர் தனிப்பட்ட நபர்கள். **வா.சா.ஆ-2** ஆவண சொத்தை சேர்த்து தான் ஒ.எஸ் 287/2008 வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் தாக்கல செய்யப்பட்ட இறுதிநிலைதீர்ப்பாணை மனு வானது மனு எண் 628/2009 தற்போது வரை நிலுவையிலுள்ளது என்றால் சரிதான். வாதிகளுக்கு தானசெட்டில்மெண்ட் கொடுத்த என் தந்தை வேறு வாரிசுகளுக்-கு அதேபோன்று தானசெட்டில்மெண்ட் எதாவது எழுதிகொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது. என் தந்தைக்கு சொந்தமான சொத்துக்கள் அனைத்தும் இன்றுவரை கூட்டு பட்டா மற்றும் கூடடு அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரிதான், ஒரு சொத்தின் பட்டா நெம்பர் 628 சர்வே நெம்பர் 105/1 ஆகிய சொத்து மட்டும் என் னுடைய தந்தை தனிப்பட்ட சொத்து.

7) தாவா சொத்து ஆக்கிரமிப்பு உள்ளதா என்றால் உள்ளது. யார் ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்றால் கோதண்டராமன், பழனி, சுப்பிரமணி மற்றும் அவர்களின் வாரிசுகள் ஆக்கிமித்து உள்ளார்கள். தாவா சொத்தில் எவ்வளவு இடம் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்றால் 1.90 ஏக்கர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்று என் தந்தை கூறினார். என் தந்தை காலத்திலே ஆக்கிரமித்து விட்டார்களா என்றால் சரிதான். நான் ஒ.எஸ் 287/2008 வழக்கை எதிர்த்து மேல்முறையீடு செய்யதாதால் தற்போது தாக்கல் செய்துள்ள வழக்கு தவறு என்றால் சரியல்ல. மேலும், தாவாவில் கேட்டுள்ள 3ம் பரிகாரத்திற்கு முறையான நீதிமன்றகட்டணம் செலுத்தவில்லை என்றால் 1ம் வாதிக்கு தான் தெரியும், எனக்கு தெரியாது.

8) மேலும், ஒ.எஸ் 287/2008 வழக்கு செல்லாது என்று நான் கூறுவதால் நான் தாவா வழக்கில் மேற்படி ஒ.எஸ் 287/2008 தரப்பினர்கள் அனைவரையும் நான் இங்கு சேர்த்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. தாவா வழக்கானது ஏற்கனவே ஒ.எஸ் 287/2008 வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதால் முன்தீர்ப்பு தடை தோசத்தால் பாதிக்கப்படுகிறது என்றால்

சரியல்ல, நான் ஆர்மியில் இருந்ததால் வழக்கை நடத்தமுடியவில்லை. என் தந்தை மற்றும் நானும் 1ம் வாதியும் தாவா சொத்தை பிரதிவாதிகளுக்கு எந்தபாகமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் வரம்பு வராது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கானது பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரிதான், நான் மேல்முறையீடு செய்வேன்.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2025.10.08 17:45:54 +0530

District Munsif,
Polur.